## நாட்டுக்காகவும் ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்த

# தியாகி இமானுவேல் சேகரனார் நினைவைப் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!



**சென்னை, செப். 12-**

**தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள சமூக வலைதளப் பதிவில் நாட்டுக்காகவும் ஒடுக்க ப்பட டோரின் முன்னேற்றத்துக்காக வும் உழைத்த தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவைப் போற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தீண்டாமையை ஒழிக்கவும் - சமூக விடுதலைக்காகவும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களது நினைவு நாள் இன்று. நாட்டுக்காகவும் ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்த அவரது வாழ்வைப் போற்றுவோம்!

சமத்துவமும் - சமூகநல்லிணக்கமும் மிளிர்ந்த சமூகத்தை நோக்கிய நமது பயணத்துக்கு அவரது தொண்டு உரமாகட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## இயற்கை பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும்

# மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, செப். 12 -

இயற்கைப் பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும் மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது என ‘தீக்கதிர்’ மந்திரி பிரதான் எதை பிரதானப்படுத்த துடிக்கிறார், எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

அது வருமாறு:

மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்தான் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லை என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

சமக்ர சிக்சா அபியான் எனப்படும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு இந்தாண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய ரூ.573 கோடியை வழங்க மறுத்து மோடி அரசு முடக்கி வைத்துள்ளது.



தீக்கதிர்

2024 செப்.11 புதன்கிழமை

**மந்திரி பிரதான் எதை பிரதானப்படுத்த துடிக்கிறார்?**

மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்தான் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லை என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

சமக்ர சிக்சா அபியான் எனப்படும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு இந்தாண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய ரூ573 கோடியை வழங்க மறுத்து மோடி அரசு முடக்கி

இந்த தொகையை வழங்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு பதிலளித்துள்ள தர்மேந்திர பிரதான் பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்க வேண்டும் என கூறியிருந்தார்.

இதன் பொருள் மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை ஏற்றால்தான் ஒன்றிய அரசு நிதி தரும் என்பதுதான்.

கல்வித்துறையில் கேரளம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் சிறந்து விளங்குகின்றன. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களை விட அனைத்து துறையிலும் சிறந்து விளங்கும் கேரளம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஏற்கவில்லையென்றால் நிதி தர முடியாது என அடாவடி செய்வதும்ஆகும்.

தாய்மொழிக் கல்விக்காகவே புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்திருப்பதாக ஒன்றிய அமைச்சர் கூறுவது அப்பட்டமான பம்மாத்து வேலையாகும்.

புதிய கல்விக் கொள்கையை ஊன்றிப் படித்தால் சமஸ்கிருத மொழியை முன்னி றுத்துவதே அவர்களது நோக்கமாக உள்ளதை புரிந்து கொள்ள முடியும். இந்தி மொழி திணிப்புக் கூட ஒரு இடைக்கால ஏற்பாடே என தெளிவாகக் கூறுகின்றன.

இந்த லட்சணத்தில் புதிய கல்விக் கொள்கை சமத்துவம் மற்றும் வருங்காலச் சிந்தனை கொண் டது என்று ஒன்றிய கல்வியமைச்சர் அளந்து விடுகிறார். குலக்கல்வியையும், ஒரு வகையான குருகுலக் கல்வியையும் கொண்டு வர முயல்கி றது ஒன்றிய அரசு. தேர்வு என்ற பெயரில் மாணவர்களை அச்சுறுத்தி கல்விக் கூடங்களை விட்டு விரட்டும் கொள்கைக்கே அவர்கள் கல்விக் கொள்கை என பெயர் வைத்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மதவெறி கொள் கைகளை திணிக்கவும், கல்வித்துறையை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முற்றாகத் திறந்து விடவும் வழிவகுப்பதே மோடி அரசின் கல்விக் கொள்கை. இதனை தமிழ்நாடு அரசு எதிர்ப்பது நூறு சதவீதம் நியாயமானது. இதைக்காரணம் காட்டி நிதி தர மாட்டோம் என மிரட்டுவது கூட்டாட் சிக் கொள்கைக்கும், அரசியல் சட்ட நெறி முறைகளுக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

இயற்கைப் பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும் மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது. தமிழ்நாடு அரசு கேட்பது பாஜகவின் பணமல்ல, தமிழ்நாட்டு மக்கள் உள்பட ஒட்டு மொத்த இந்திய மக்களும் செலுத்தியுள்ள வரிப் பணத்தில் தன்னு டைய பங்கையே தமிழ்நாடு கேட்கிறது. இதை மறுக்க ஒன்றிய அரசுக்கு எந்த உரிமையும் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, செப் 12 -

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

**தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**வணிகர் பெருமக்களின் நலனுக்காக உழைத்த அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




திண்டுக்கல் எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற சுயஉதவிக்குழு பெண்களுக்கு கடனுதவி வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி 1392 மகளிர் சுயஉதவிகுழுவினருக்கு ரூ.123.54 கோடி மதிப்பிலான வங்கிக்கடனுக்கான ஆணைகளை வழங்கினார். அருகில் உணவு மற்றும் உணவுபொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் எம்.பி.ஆர்.சச்சிதானந்தம், வேடசந்தூர் எம்.எல்.ஏ. காந்திராஜன், திட்ட இயக்குநர் திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா உட்பட பலர் உள்ளனர்.

## ‘சமக்ர சிக்ஷா’ நிதியை தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது – கல்வி தொடர்பாக

# மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சுயாட்சியை மீறுவதாகும்!

## பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு பதில்!



**சென்னை, செப். 12 –**

**‘சமக்ர சிக்ஷா’ நிதியை தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது – கல்வி தொடர்பாக மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கயுள்ள சுயாட்சியை மீறுவதாகும் – என, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கையில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு விளக்கமளித்துள்ளார்.**

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு அளித்துள்ள பதில்கள்

**அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் கனிவான கவனத்திற்கு ...!**

*1930-கள் மற்றும் 60-களின் வரலாற்று இயக்கங்களில் வேரூன்றிய இருமொழிக் கொள்கையின் வாயிலாகத் தமிழ்நாடு தன்னுடைய மொழியியல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் எப்போதும் உறுதியாக இருந்து* வருகிறது. தமிழை எங்களுடைய அடையாளத்தின் தூணாக ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் எதிர்காலத் தலைமுறையினர் ஆங்கிலப் புலமை பெறுவதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம்.

**கேள்வி ஒன்றுக்கான பதில்:**

எங்களுடைய கொள்கை எப்போதும் தமிழை அடிப்படையாகக் கொண்டு, அனைத்தையும் உள்ளடக்கிய கற்றலுக்கு முன்னுரிமை அளித்துவரும் அதேவேளையில், மாணவர்களுடைய ஆங்கில அறிவையும் மேம்படுத்துகிறது.

**கேள்வி இரண்டுக்கான பதில்:**

எங்களுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலைவாய்ப்பில் சம நிலையினை உருவாக்கிட போட்டித் தேர்வுகளைத் தமிழில் நடத்த வேண்டும் என ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார்.

**கேள்வி மூன்றுக்கான பதில்:**

பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பப் பாடங்களைக்கூட மொழி பெயர்த்து, தமிழில் கற்றல் கருவிகளை வெளியிடுவதில் தமிழ்நாடு முன்னணி வகித்துவருகிறது.

**கேள்வி நான்கிற்கான பதில்:**

தமிழ்நாட்டின் கொள்கைகள் ஏற்கெனவே முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், நான்முதல்வன், இல்லம் தேடிக் கல்வி, தமிழ்ப் புதல்வன், எண்ணும் எழுத்தும் போன்ற திட்டங்களின் வாயிலாக முழுமையான மற்றும் உள்ளடக்கிய பண்புகளைப் பிரதிபலிக்கின்றன. இவை, தேசியக் கல்விக் கொள்கைக்கு முந்தையவை மற்றும் அதன் இலக்குகளுடன் பொருந்திச் செல்பவை.

இறுதியாக, தமிழ்நாடு ஏற்கெனவே தன்னுடைய சொந்த முன்னெடுப்புகளின் வாயிலாக, தேசியக் கல்விக் கொள்கையின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு அம்சங்களையும் செயல்படுத்திவருகிறது. இருப்பினும், மும்மொழிக் கொள்கை, பாடத்திட்ட மாற்றங்கள் போன்ற குறிப்பிட்ட அம்சங்களைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

‘சமக்ர சிக்ஷா’ நிதியைத் தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது, கல்வி தொடர்பாக மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சுயாட்சியை மீறுவதாகும்.

எனவே, தேசிய கல்விக் கொள்கையுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் இல்லாமல் ‘சமக்ர சிக்ஷா’ திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

# செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

*மயிலாடுதுறை. செப். 12*

*மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூர் ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் பாண்டு (எ) என்.ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என்.விஜயபாலன், எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அமுர்தவிஜயகுமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கன் நத்தம் ஏ.வின் சென்ட், ஜெ.கபிலன், எஸ். வெற்றிவேல், அர்ஷத், பேரூர் கழகச் செயலாளர் எஸ்.கே.முததுராஜா, ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத்தலைவர் பாஸ்கர், ஒன்றிய துணைச் செயலாளர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ரபியாநர்கிஸ்பானு துளசிரேகாரமேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைர்பாளர் ஜெ.கே. வினோத்பாண்டியன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிளைப்பாளர் கே.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அபதுல் மாலிக் வரவேற்றார்.*

*கூட்டத்தில் மயிலாடுதுறை மமாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றி னார். மாவட்ட பிரதிநிதி கள் கே.எஸ்.எஸ்.கருணாநித, ஈச்சங்குடி க. இளங்கோவன், கே.பி.ராஜா, ஒன்றிய பொருளாளர்*

*ஏ.ரெங்கராஜ், துணைச் செயலாளர்கள் கா. இளங்கோவன், எஸ்.சிவக்குமார், செல்லமாள் பன்னீர்செல்வம் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.*

*எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்டமன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்கள் என்ற இலக்கை எட்டிடும் வகையில் தீவிரமாக பணியாற்றுவோம் என்று தீர்மானிக்கப்பட்டது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை க. வீரய்யா

### செப்டம்பர் 12 (1993)



**புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

### செப்டம்பர் 12 (2019)



**வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவர்.**

**ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**